[22nd March 1961

அரசாங்கத்தினுடைய நோக்கம். இதற்கு விற்பனே வரி சம்பந்தமில்லை என்றாலும்கூட, கனம் நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கின்றபோது கூறியதுபோல், இதற்கெல்லாம் எவ்வளவு சலுகை கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே எந்தெந்த வகையிலே சவுகரியங்கள் அளித்து, பாலின் உற்பத்தியை கிராமாந்திரங்களிலே பெருக்கி, அதன் மூலம் அங்குள்ளவர் களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் அதிக கவனம் செலுத்தப் பட்டு வருகின்றது.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், பாலிலே இருக்கக்கூடிய சத்தைவிட பால் பவுடரிலே சத்து மிகமிகக் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுவது உண்மையா ? ஆகவே பாலை எந்த அளவு அதிகப்படி யாக பெருக்கவேண்டுமோ, அந்த அளவில் பெருக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் களுடைய அரிய யோசனையே, அரசாங்கத்தின் உத்தேசமும் ஆகும்.

SRI A. VEDARATHNAM : ஸார், பால் பண்ணைகளை விருத்தி செய்ய வேண்டுமானால், அதற்கு முக்கியமாக மாடுகள் மேய்வதற்கு மேய்ச்சல் தரிசு நிலங்கள் நிரம்ப வேண்டும். இப்போது அந்த மேய்ச்சல் தரிசுகள் எல்லாம் எப்படியோ மறைந்து விட்டன. அதையெல்லாம் மீண் டும் கிடைக்கும்படி செய்ய அரசாங்கம் முன்வருமா ? அதோடு தீனி விலை அதிகமாக இருப்பதால் அதையும் குறைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மறைந்த மேய்ச்சல் தரையை மீண்டும் பெறுவது கஷ்டம்தான். இருந்தாலும், மேய்ச்சல் வசதிக்கும், தீனி பெருகுவதற்கும் என்னென்ன செய்யவேண்டுமோ, அரசாங்கம் அதிலே எல்லாம் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது.

Butter-cum-Milk Factory

* 984 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பாலைப் பால் பவுடராகவும், வெண்ணெயாகவும் மாற்றுவதற் கான தொழிற்சாலை ஒன்று நிறுவுவது பற்றி அரசாங்கத்தாரால் பரிசீலனே நடத்தப்பட்டு வருகிறதா ?

(இ) அப்படியாயின், இத்தொழிற்சாலை எந்த இடத்தில் நிறுவப் படும் ?

(உ) இத்தொழிற்சாலை நிறுவப்பட எவ்வளவு தொகை தேவைப் படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) There is a proposal for establishment of butter-*cum*-milk powder factory included in the Third Five-Year Plan. The location of the factory and the time of implementation of the Scheme have yet to be finalised.

(*c*) The outlay for the scheme in the Third Five-Year Plan is Rs. 15 lakhs.

Textile workers (wages)

* 985 *Q.*—SRI N. MARUDACHALAM : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—

நெசவாலைகளிலிருந்து நீக்கப்பட்ட நெசவாலைத் தொழிலாளர்களின் வேலை நீக்குதலைத் தகுந்த நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்யும் வரை ஆலை முதலாளிகள் அவர்களுக்கு அரைச் சம்பளம் கொடுக்கும்படிச் செய்வதற் கான ஏற்பாடு செய்யும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.